**செ.வெ.எண்: 25** **நாள்: 27.05.2026**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை (DMMU) அலகு, வட்டார இயக்க மேலாண்மை அலகில் (BMMU) கிராமப்புர பகுதிகளில் காலியாகவுள்ள 97 தற்காலிகப்பணியான **சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள்** பணியிடத்திற்கு நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கலாம்.

**காலிப்பணியிட விபரம்**

ஆண்டிமடம் 13, அரியலூர் 15, ஜெயங்கொண்டம் 17, செந்துறை 18, தா.பழூர் 16 மற்றும் திருமானூர் 18 ஆகிய வட்டாரங்களில் உள்ள கிராமப்புர பகுதிகள்.

**சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களுக்கான தகுதிகள்**

12-வது வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக எழுதப் படிக்கவும் மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் நாளில் 35 வயதுக்கு கீழ் இருத்தல் வேண்டும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த பெண் சுய உதவிக் குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும். சுய உதவிக்குழு ஊக்குநராக குறைந்த பட்சம் 2 ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு தேர்வு செய்யப்படும் நபர் சமுதாயம் சார்ந்த அமைப்பு பணியாளராகவோ அல்லது தனியார் நிறுவனங்களில் முழுநேரப் பணியாளராக பணி இருத்தல் கூடாது. வாராக் கடன் உள்ள குழுவின் உறுப்பினராக இருக்க கூடாது. தேர்வு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் பணிபுரியும் ஊராட்சியை (அல்லது ஊராட்சிகளை) சார்ந்தவராக இருத்தல் அவசியம். மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களாக இருத்தல் வேண்டும். (உரிய தகுதிகளுடன் இலக்கு மக்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், பிற விண்ணப்பதாரர்களை கருத்தில் கொள்ளலாம்). தகவல் தொடர்பு திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும். வங்கிகளுக்குச் சென்று பரிவர்த்தனைகள் செய்தும் கடன் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்தும் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். கணினி திறன் மற்றும் இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் இருத்தல் அவசியம். ஆண்ட்ராய்டு (Android) கைபேசியில் குறுந்தகவல் (SMS) மற்றும் Whats app-ல் செய்தி அனுப்பவும் மற்றும் செயலி இயக்கும் திறன் பெற்றவர்களாகவும் இருத்தல் அவசியம்.

**விண்ணப்ப கடிதத்துடன் இணைக்கப்படவேண்டிய ஆவணங்கள்**

விண்ணப்பதாரரின் பெயர், பிறந்ததேதி, வயது, பாலினம், கல்வித்தகுதி, வசிப்பிட முகவரி, கைபேசி எண் ஆகிய விபரங்களை விண்ணப்ப கடிதத்தில் தெளிவாக பிழைகள் ஏதுமின்றி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும், +2 கல்வி தகுதிக்கான சான்று, வயது சான்று (ஆதார், PAN Card, ஓட்டுநர் உரிமம்), முகவரிக்கான சான்று மற்றும் இரண்டு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம்.

**மதிப்பூதியம்**

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்களாக தேர்வு செய்யபட்டோருக்கு மாதாந்திர அடிப்படை மதிப்பூதியம் ரூ.2,500/-

மேற்காணும் பணிக்கான விண்ணப்பங்களை அரசு வேலை நாட்களில் **27.05.2026 முதல் 06.06.2026 வரை** காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் அறை எண் 215. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலக முகவரியில் வைக்கப்பட்டுள்ள மூடி முத்திரையிடப்பட்ட பெட்டியில் நேரிலும் அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி. இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**.செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**